This Page Intentionally
Left Blank

# வெள்ளிக் கிழமை



ஸ்ரீ ரமணாச்ரமம்
திருவண்ணாமலை
2002

# தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்திரம்

## மங்கலம்

வைராக்கியத்தினால் உறுதியுற்றவராய், சாந்தியை அடையும் பொருட்டு அதைத் தேடிவரும் முனிவர்களுக்கு சாந்தியை அடைவித்து அதில் நிலைபெறச் செய்யும் பொருட்டு தக்ஷிணா மூர்த்தியாக விளங்கி மௌனமாம் தன் உண்மை நிலையை அவர்களுக்கு விளங்கும்படி காட்டியருளியதை இந்த தோத்திரத்தின் வாயிலாக எல்லாம் தன்மயமே என்ற சங்கரன் என்னுள் பொருந்தி இருந்து செய்பவனாவான். (இந்நூலை செய்பவனாவான்)

## நூல்

1. மௌனமாகிய வியாக்கியானத்தால் காட்டியருளிய பரப்பிரம்ம சொரூபனும், பாலனும், சீவ நிலையுற்ற பிரம்ம நிஷ்டர்களான உத்தம சீடர்களால் சூழப்பட்டவனும், குரு சிரேஷ்டனாக சின்முத்திரையுடன் கூடிய கையனும், ஆனந்தமே ஓர் உருவாகக் கொண்டவனும் தனக்குள் தானாகவே ரமிப்பவனும், சந்தோஷமான முகமுடையவனுமாகிய தக்ஷிணாமூர்த்தி அப்பனை நாம் போற்றி துதித்திடுவோம்.

2. உலகமானது கண்ணாடியில் காணப்படும் நகரத்தைப் போன்று தனக்குள் இருந்தும்; அறியாமையால், கனவைப் போன்று, வெளியில் இருப்பதாகப் பார்த்து பின் விழித்ததும் தன்னையே காண்பது போல, உண்மை நிலையை அறியும்போது, தன் சொரூபத்தை இரண்டற்ற ஒன்றேயாக எவன் நேராகக் காண்பானோ, ஆதி குருவாகிய அந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

3. விதைக்குள் இருக்கும் முளையைப் போன்று தனக்குள் வேற்றுமையின்றி இருந்த உலகத்தை சிருஷ்டிக்குப் பின்பு மாயையின் கற்பனா சக்தியினால் தேச காலங்களையும், அவற்றின் கர்ம வசத்தினால் தோன்றும், பலவித தோற்றமான உலகையும் சிந்தனையும், இந்திர ஜாலம் செய்பவனைப் போலவும் தன் இச்சா சக்தியினால் எவன் வெளியில் சிருஷ்டிக்கின்றானோ அந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

4. எவனது உண்மைப் பிரகாசமானது இல்லாத பொய் தோற்றமாக இயங்கும் பொருள்களிலும் வியாபித்து பிரகாசிக்கிறதோ, எவன் தன்னை ஆச்ரயித்தவர்களை அது நீயாக இருக்கிறாயென்று அறிவித்து உணர்த்துகிறானோ, எவனைப் பிரத்தியட்சயமாகத் தரிசிப்பதினால் மீண்டும் இந்த சம்சார சாகரத்தில் வீழ்வதில்லையோ, தபஸ்விகளால் அடையப்படும் குரு மூர்த்தமாகிய அந்த தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

ஸ்ரீ

# தக்ஷிணாமூர்த்தி தோத்திரம்

## மங்கலம்

மன்னுமா முனிவரர் சாந்தி மன்னவே
தென்முக மூர்த்தியாய்த் திகழ்ந்து மோனமாந்
தன்னிலை திகழ்த்தியித் துதியிற் றன்மயஞ்
சொன்னவச் சங்கரன் றுன்னு மென்னுளே.

## நூல்
### (அறுசீர்விருத்தம்)

மவுனமா முரையாற் காட்டு மாப்பிரம வத்து வாலன்
சிவநிலைத் தவர்சற் சீடர் செறிகுரு வரன்சிற் கைய
னுவகையோ ருருவன் றன்னு ளுவப்பவன் களிமு கத்த
னவனையாந் தென்பான் மூர்த்தி யப்பனை யேத்து வோமே. 1

உலகுகண் ணாடி யூர்நே ருறத்தனு ளஞ்ஞா னத்தால்
வெளியினிற் றுயிற்க னாப்போல் விளங்கிடக் கண்டு ஞான
நிலையுறு நேரந் தன்னை யொருவனா யெவனேர் காண்பன்
றலையுறு குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 2

வித்துளே முளைபோன் முன்னம் விகற்பமி லிச்ச கம்பின்
கற்பித மாயா தேய காலகர் மத்தாற் பற்பல்
சித்திரம் விரிப்பன் யாவன் சித்தனு மாயி கன்போற்
சத்தியாற் குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 3

எவனொளி யுண்மை யின்மை யியைபொரு ளிலங்கு நேரே
யெவனது நீயா னாயென் றிசைத்துணர்த் துவன்சேர்ந் தோரை
யெவனைநேர் காணின் மீண்டு மிப்பவக் கடல்வீழ் வில்லை
தவருறு குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 4

5. அனேக துவாரங்களுள்ள குடத்துள்ளிருக்கும் தீபத்திலிருந்து பாய்ந்து வரும் ஒளிக்கதிர்கள் போல எவனது ஞானம், கண் முதலான இந்திரியங்களின் வழியாய்ச் சென்று வெளியே ஓடி நான் அறிந்தேனென்று விளக்கிடுமோ, எவனைச் சார்ந்து இந்த உலகம் பிரகாசிக்கின்றதோ, அந்த சலனமற்ற குருவாகிய தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

பலதுளைக் குடத்துட் டீபப் பாய்கதிர் போல்யார் ஞானம்
விழிமுதற் பொறிவாய்ப் பாய்ந்து வெளிசரித் தறிந்தே னென்ன
விளங்கிடு மெவனைச் சார்ந்து விளங்குமிவ் வவனி யாவுஞ்
சலமறு குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 5

6. பெண்கள், குழந்தைகள், குருடர், அறிவற்ற ஜடர்போன்ற மூடவாதிகள்; தேகம், பிராணன், இந்திரியங்கள், புத்தி, இவை ஒடுங்கும் சூனியம் முதலானவற்றையே ‘தான்’ என்று தேர்ந்திடுவர். இந்த அறியாமையாலுண்டாகும் மயக்கத்தின் வலிமையை நாசம் செய்யும் தடையற்ற ஞான குருவாகிய தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

உடலுயிர் பொறிகள் புந்தி யொன்றுபா ழகமாத் தேர்வர்
மடந்தையர் பால ரந்தர் மடையரேய் மூட வாதி
மடமையால் விளையு மம்மா மயக்கமே மாய்க்கு ஞானத்
தடையறு குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 6

7. இராகுவினால் பிடிபட்ட சூரிய, சந்திரர்கள் போல எப்போதுமுள்ள ஆத்மாவானது மாயையின் மறைப்பினால் ஜீவனாகி, மனம் ஒடுங்கும்போது தூங்கியவனாய், மனம் விரிந்து விழிக்கும்போது முன்பு உறங்கினேன் நான் என்று எவன் தனது இருப்பை உணர்கிறானோ அந்த அகில சராசர குருவான தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

இராகுபற் றிரவி திங்க ளெனவுளன் மாயை மூடப்
பராவுள மொடுங்கத் தூங்கிப் பரவிட வுணருங் காலம்
புராவுறங் கினனா னென்று போதனா மெவன்பு மானாய்ச்
சராசர குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 7

8. குழந்தைப் பருவம்; நனவு-கனவு, சுகம்-துக்கம் என்று கூறப்படும் அவஸ்தைகள் எல்லாவற்றிலும் சுழன்று வந்தாலும், தான் மட்டும் மாறாமல் அவற்றுடன் கலந்திருந்து எப்போதும் ‘நான்’ என்று உள்ளே பிரகாசிக்கும் தன்னை, சரணமடைந்தவர்களுக்கு சின்முத்திரையினால் எவன் விளக்குகிறானோ அந்த ஞானாக்னி நேத்திரனான தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

குழவிமுன் னனவு முன்னாக் கூறுபல் லவத்தை யெல்லாஞ்
சுழலினுங் கலந்தி ருந்தே சொலிக்குமுள் ளகமா நாளுங்
கழல்விழு வோர்க்கார் தன்னைக் காட்டுவன் சிற்கு றிப்பாற்
றழல்விழிக் குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 8

9. இந்த உலகத்தை காரண-காரியத்தன்மையோடும், எஜமானன்-தாசன், சிஷ்யன்-ஆச்சாரியன், தந்தை-மகன் என்ற மமகார பேதங்களோடும் மாயையினால் மயங்கியவனாய், கனவிலும்-நனவிலும் பலவிதமாக காண்கின்ற இந்த ஆத்மா எவனோ அந்த ஜகத் குருவான தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

உலகையா ரிப்பு மானைக் குறும்பல நனக்க னாவிற்
கலங்கியே மாயை யாலே காரிய கார ணம்பின்
றலைவனுந் தாசன் சீடன் குருமகன் றந்தை யாதி
தலமுறு குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 9

10. பூமி, நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், சந்திரன், சூரியன், புருடன் என அசைகின்ற-அசையாதனவாய்ச் சேர்ந்து பிரகாசிக்கின்ற இவைகள் எல்லாம் எவனது அஷ்ட மூர்த்தமோ; உண்மையை விசாரித்துணர்வாருக்கு எங்கும் நிறைந்தவனாய் அன்னியமாய் சிறிதும் இல்லாதவனாய் எவன் விளங்குகிறானோ அந்த கருணாமூர்த்தியான தக்ஷிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

மண்புன லனல்கால் வான மதிகதி ரோன்பு மானு
மென்றொளிர் சராச ரஞ்சே ரிதுவெவ னெட்டு மூர்த்த
மெண்ணுவார்க் கிறைநி றைந்தோ னெவனினன் னியஞ்சற் றின்றாந்
தண்ணருட் குருவா மந்தத் தக்ஷிணா மூர்த்தி போற்றி. 10

11. எல்லாம் தானாய் இருக்கும் நிலையை நன்கு தெளிவாகத் தெரிவிக்கும் இந்த ஸ்தோத்திரத்தை கேட்பதுவும், அர்த்தத்தை நன்கு சிந்தித்து விசாரிப்பதும், அர்த்தத்தை நன்கு சிந்தித்து விசாரிப்பதும், தியானிப்பதும், கானம் செய்வதுமான இவற்றால் எல்லாம் தன்மயமாயுள்ள சர்வாத்மத்வமும், ஈசுவரத்வமும் சித்தியாகும். அத்துடன் அணிமாதி அஷ்ட ஐசுவரியமும் சேரும்.

சருவமுந் தானா னன்றாய்ச் சாற்றுமித் தோத்தி ரத்தின்
சிரவணந் தன்னா லர்த்த சிந்தனந் தியானங் கானம்
புரிவதா லெல்லாந் தானும் பூதிசே ரீசன் றன்மை
மருவிடு மற்று மெட்டா மடிவறு செல்வந் தானே. 11